வறுமை மேலோட்டங்கள்





# இலங்கையில் நகர்ப்புற வறுமை - 2013

சுருக்க ஆய்வுக் கட்டுரைத் தொடர்
இல 14 - 2015

cepa
centre for poverty analysis

# இலங்கையில் நகர்ப்புற வறுமை - 2013

**இஷாரா ரத்நாயக்க**

நெரன்ஞனா குணதிலக மற்றும் அஸ்ரா அப்துல் காதரினால் எழுதப்பட்ட
இலங்கையில் நகர்ப்புற நெரஞ்ஜஒரு மீள்பதிப்பு

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் பிரசுரம்

சுருக்க ஆய்வுக் கட்டுரைத் தொடர்
இல 14 - 2015

© வறுமை ஆராய்ச்சி நிலையம் 2015

வறுமை சுருக்க ஆய்வுக் கட்டுரைகளானவை வறுமை ஆராய்ச்சி நிலையம் தகவல்களை உருவாக்கியுள்ள விடயங்களில் உடனுக்குடன் விரைவாக தகவல்களை பரம்பலடையச் செய்யும் நோக்குடனான வறுமை ஆராய்ச்சி நிலைய சுருக்க ஆய்வு கட்டுரைத் தொடரின் பகுதிகளாகும்.

இம்மேலோட்டக் கட்டுரைத் தொடரானது மூன்று வகைகளைக் கொண்டுள்ளது.

1) **வறுமை மேலோட்டங்கள்:** இவை துறை சார்ந்த மற்றும் துறை சாரா அரங்கினர்களுக்காக முறைசாரா முறையில் தகவல்களை வழங்குவனவாக அமைக்கப்பட்டுள்ளன.

2) **கொள்கை மேலோட்டங்கள்:** இவை தெளிவான கொள்கை ஒழுங்கமைப்பைக் கொண்டிருப்பதுடன் வறுமை மற்றும் அபிவிருத்தி விடயங்களில் பணியாற்றும் அரச, அரச சாரா ஆய்வு நிலையங்கள் மற்றும் நன்கொடை நிறுவனங்களின் கொள்கை வகுப்பாளர்களை இலக்காகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

3) **மையக்கரு சுருக்க ஆய்வுக் கட்டுரைகள்:** வறுமை ஆராய்ச்சி நிலையமானது புலம்பெயர்வு, யுத்தத்தின் பின்னான அபிவிருத்தி, சூழல் மற்றும் வறுமை, பலவீனமான தன்மை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என ஐந்து மையக்கரு ஆய்வு பகுதிகளின் அடிப்படையில் சுயாதீனமான ஆய்வுகளை எடுத்தாளுகின்றது. மையக்கரு சுருக்க ஆய்வுக் கட்டுரைகள் இலங்கையின் வறுமை மற்றும் அபிவிருத்தி சார்ந்த இவ்வைந்து மையக்கருக்களுள்ளான ஆய்வுகளை உள்ளடக்குகின்றன.

ரத்நாயக்க, இஷாரா

இலங்கையில் நகர்ப்புறவறுமையின் ஒரு மீள் பதிப்பு/ இஷாராரத்நாயக்க–
கொழும்பு : வறுமைஆராய்சிநிலையம், 2015

ப. 27 ; செமீ. 21

ISBN 978–955–1040–89-5

i 362.5095493டிவி 23 ii தலைப்பு

1. வறுமை–ஆய்வு - இலங்கை

2. நகர்ப்புற–வறுமை - இலங்கை

# முன்னுரை

வறுமை ஆராயச்சி நிலையம் முதலில் 2004ஆம் ஆண்டு *இலங்கையில் நகர்ப்புற வறுமை* இனை பிரசுரித்தது. அச்சுருக்க ஆய்வு கட்டுரையானது கொழும்பு நகரத்தினை விசேட குறிப்பிற்கொண்டவாறு *இலங்கையின் நகர்ப்புற வறுமையில் ஒரு மேலோட்டத்தினை* வழங்கியதுடன் இது நெரன்ஜனா குணதிலக மற்றும் அஸ்ரா அப்துல் காதரினால் எழுதப்பட்டது.

2013 இல் தற்போதைய தரவுகளுடனான ஒரு ஆய்வறிக்கையின் தேவையினை வறுமை ஆராய்ச்சி நிலையம் உணர்ந்ததை அடுத்து இஷாரா ரத்நாயக்கவினால் *இலங்கையில் வறுமை மேலோட்டம்* எழுதப்பட்டது.

இச்சுருக்க கட்டுரை ஆய்வானது நகர்ப்புற வறுமை அதிகம் நிலவுகின்ற கொழும்பு பெரு நகர்ப் பகுதிக்கு விசேட குறிப்பை கொடுத்தவாறு இலங்கையில் நகர்ப்புற வறுமையை நோக்குகின்றது. இது நகர்ப்புற வறுமையை தீர்ப்பதில் எதிர்கொள்கின்ற எதிர் விளைவுகள், முகம்கொடுக்கப்பட்ட சவால்களை எடுத்து நோக்குவதுடன் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சிகளை பாதிக்கின்ற இன்றியமையாத நிறுவன மற்றும் கொள்கை சார்ந்த விடயங்களையும் குறித்து காட்டுகின்றது.

இஷாரா, வறுமை ஆராய்ச்சி நிலையத்தினது வறுமை மதிப்பீடு மற்றும் அளவீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் ரொமேஷன் குலசபாநாதன் மற்றும் கீதா மாயாதுன்னே என்போருக்கு தமது உள்ளீடுகளை வழங்கியமைக்காக நன்றி தெரிவிக்கின்றார். மேலும் சேவநாதாவினது திரு எச். எம். யு. சூலரத்ன மற்றும் கொழும்பு மாநகர சபை பொறியியலாளர் தாமரா மல்லவாரச்சிக்கும் அவர்களது உதவிகளுக்காக நன்றி பகர்கின்றார்.

இச்சுருக்க ஆய்வு கட்டுரையினது அச்சிடல் மற்றும் சிங்கள மற்றும் தமிழ் மொழி மாற்றத்திற்கும் நிதி உதவி வழங்கிய “சிந்தனை தாங்கி” ஆரம்ப முயற்சிக்கும் வறுமை ஆராய்ச்சி நிலையம் நன்றியுடனுள்ளது.

இச்சுருக்க ஆய்வு கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்ட நோக்குகளும் கருத்துக்களும் எழுத்தாளர்களைச் சார்ந்தவையே. அவை வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் தனிப்பட்ட கருத்தை பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. அறிமுகம் | 1 |
| 2. நகர்ப்புற வறுமைச் சூழ்நிலை | 1 |
| 2.1 இலங்கையில் நகர்ப்புற பிரிவு | 1 |
| 2.2 நகர்ப்புற துறையில் வறுமை | 2 |
| 2.3 கொழும்பு நகரில் வறுமை | 3 |
| 2.4 கொழும்பில் நகர்ப்புற வறுமையினது பரிமாணங்களும் இயக்கப்பாடும் | 4 |
| 2.5 ஒப்பீட்டு மற்றும் முழு இடம் | 5 |
| 3. கொழும்பில் நகர்ப்புற வறுமையை எதிர்கொள்ளல் | 7 |
| 4. நகர்ப்புற வறுமைமயை எதிர்கொள்வதிலுள்ள சவால்கள் | 12 |
| 4.1 நிறுவன தோற்றவமைப்பு | 13 |
| 4.2 கொள்கை திட்டவமைப்பு சட்டகம | 15 |
| 4.3 நகர வறிய மக்களின் அறிவு மட்டத்தினை விரிவாக்குவதை நோக்கிய நகர்வு | 16 |
| 5. உடனடி தலையீடுகளுக்கு சாத்தியமாகவுள்ள முன்னுரிமை பிரதேசங்களை இனங்காணல் | 17 |
| உசாத்துணைகள் | 19 |

# 1. அறிமுகம்

இவ்வறுமை ஆய்வுச் சுருக்கமானது நகர்ப்புற வறுமையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு பெரு நகர பகுதிக்கு விஷேட கவனம் வழங்கியவாறு நகர்ப்புற வறுமை தொடர்பான ஒரு சூழ்நிலை மேலோட்டத்தினை வழங்குகின்றது. ஆய்வுச் சுருக்கமானது கொழும்புப் பிரதேசத்திலுள்ள வறுமைச் சூழ்நிலை, நகர்ப்புற வறுமையினை முன்வைப்பதிலான தாக்கங்கள், முகம் கொடுத்துள்ள சவால்ளை எடுத்து நோக்குவதுடன் இப்பிரச்சினையினை முன்வைப்பதற்கான முயற்சிகளைப் பாதிக்கின்ற திறனாய்வுக்குரிய நிறுவனங்கள் கொள்கை விடயங்களை குறிப்பிட்டுக் காட்டுகின்றது. இறுதியாக இவ்வாய்வுச் சுருக்கம் உடனடித் தலையீடுகள் செய்யப்படுவதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய பகுதிகளையும் இனங் காண்கின்றது.

சுதந்திரம் பெறப்பட்ட காலம் தொடக்கம் கிராமிய மற்றும் தோட்டப்புற வறுமை நிலவுவதானது ஏற்றுக்கொள்ளப்பட்டு விரிவாகக் கலந்துரையாடப்பட்டு வருகின்றதெனினும், நகர்ப்புறப் பிரதேசங்களிலான வறுமையானது அறியாமை காரணமாக ஓரளவு புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது. அதற்கேற்ப அறிவு மட்டம் அதே போல் கொள்கை உருவாக்கம் மற்றும் தலையீடுகள் கிராமிய மற்றும் தோட்டப்புற துறைகளுக்கு பக்கச் சார்பாகவே இருந்துள்ளன. இருந்தாலும் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நகர்ப்புற வறுமைக்கு குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளதுடன் அதன் தனித்துவத் தன்மை தொடர்பான ஒப்புகைகளும் மற்றும் நகர்ப்புறங்களை மையப்படுத்திய நிறுவன அமைப்புக்களும் நிறுவப்பட்டுள்ளன. எனவே கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்ட தலையீடுகளின் போது நகர்ப்புற வறுமை தொடர்பான பிரச்சினைகளை முன்வைப்பதற்கான வாய்ப்பானது அதிகரித்து வருகின்றது.

# 2. நகர்ப்புற வறுமைச் சூழ்நிலை

## 2.1 இலங்கையில் நகர்ப்புற பிரிவு

பல அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களுடன், குறிப்பாக தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் ஒப்பீட்டளவில் குறைந்த வீதத்திலேயே நகரமயமாக்கல் இடம்பெறுவது அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. 2001ம் ஆண்டு குடித்தொகை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கேற்ப கொழும்பு மாநகர சபைப் பிரதேச வதிவிட குடித்தொகை 647100 ஆக இருந்ததுடன் இலங்கையின் மொத்த நகர்ப்புறக் குடித்தொகை 2000ம் ஆண்டில் 2.97 மில்லியனாகும். 2010ஆம் ஆண்டில் இலங்கையின் நகர்ப்புறகுடித்தொகை 2.92மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இது மொத்த குடித்தொகையின் 14% ஆகும் (http://www.indexmundi.com/sri_lanka/).

மேலே குறிப்பிடப்பட்ட கணிப்பீடுகள் 'நகர்ப்புற பிரிவு' என வரையறுக்கப்பட்டு தற்போது மாநகர அல்லது நகர சபையினால் ஆளப்படுகின்ற பிரதேசங்களை அடிப்படையாக கொண்டவையாகும். இருந்தாலும் கொழும்பு நகரைச்சூழவுள்ள பகுதிகள் உப நகர குடியிருப்புப் பகுதிகளாக விரிவடைந்து வருகின்ற நிலையில் சூழல் மற்றும் சமூக பொருளாதார கட்டமைப்புக்களின் அடிப்படையிலான பரிமாணங்களிலன்றி நிர்வாக எல்லைகள்[1] அடிப்படையிலான இவ்வரைவிலக்கணத்தினது பொருத்தப்பாடானது சந்தேகத்தினை எழுப்புகின்றது. 1980 களின் ஆரம்பத்தில் கொழும்பு உட்பட பிரதான நகரங்களின் நகர்ப்புற வளர்ச்சி வீதமானது 1% இலும் குறைவாகும். எனினும் 1980 களின் நடுப்பகுதிகளிலிருந்து கொழும்பின் பரந்த புறநகர்ப் பகுதிகள் அதிகரித்ததோடு 1981 – 1992 இடைப்பட்ட காலப்பகுதியில் கொழும்பின் சனத்தொகையானது 20% வளர்ச்சியை கொண்டிருந்ததுடன் அதன் நகர்ப்புறக் குடித்தொகையானது 60% இற்கும் மேலாக காணப்பட்டது. இது 15% ஆக குடித்தொகை வளர்ச்சி வீதத்தைக் கொண்டிருந்த ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க கணிசமான உயர்வாகும்.

## 2.2 நகர்ப்புற துறையில் வறுமை

தேசிய ரீதியில் நகர்ப்புற வறுமை நோக்கப்படும் போது இது மிகவும் அனுகூலமான நோக்கினைத் தருகின்றதாக உள்ளது. இலங்கையில் நகர்ப்புற துறையினரே மிகவும் தாழ் விகித வறுமை நிலையினைக் கொண்டுள்ளனர். வறுமைக் கோட்டின் கீழே 5.3% (ஏறத்தாழ ஒரு மில்லியன்) குடித்தொகையினர் மாத்திரமே உள்ளனர். இது தேசிய வீதமான 8.9% இலும் குறிப்பிடத்தக்களவு குறைவாகும்.[2]

வறுமைக்கான மரபுரீதியான தேசிய வரைவிலக்கணங்களில் கருத்தில் கொள்ளப்பட்ட திறனாய்வவுக்குரிய மாறிகள் உணவு மற்றும் உணவல்லாத பொருள்களின் மீதான செலவாகும். தொகை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கேற்ப (2004) இலங்கையில் அதிகாரபூர்வமான வறுமைக் கோடானது கலோரி உள்ளெடுக்கப்படுதல் தொடர்பாக தெரிவிக்கப்படுகின்றதுடன் ஒரு நபருக்கு 2030 கிலோ கலோரி அளவான போசணைத் தேவையைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமான பண (மூலதன) செலவு என வரைவிலக்கணம் கொடுக்கப்படுகின்றது. கிடைக்கப்பெறக் கூடியதாகவுள்ள அண்மைய தரவுகளுக்கேற்ப[3] நகர்ப்புறக் குடும்பமொன்றின் உணவு மற்றும் குடிபானத்திற்கான மாத சராசரிச் செலவு ரூபா 16,003[4] ஆக உள்ளதுடன் இது மொத்தச் செலவின் 36%

---

[1]தொகை மதிப்பீட்டுத் திணைக்களம் நகர்ப்புற வறுமையை 'மாநகர அல்லது நகர சபையினால் ஆளப்படுகின்ற பிரதேசங்கள்' என வரைவிலக்கணப்படுத்துகின்றது. தோட்டப்புறத் துறையினது வரைவிலக்கணம் 'ஒரு தனி நிர்வாகத்தின் கீழ் 10 இற்கு மேற்பட்ட வதிவிட தொழிலாளர்களை கொண்ட 20 ஏக்கர்களிற்கு மேற்பட்ட பெருந்தோட்டப் பிரதேசப் பரப்பாகும்' கிராமியத்துறையானது 'நகர்ப்புற அல்லது பெருந்தோட்டத் துறைக்குட்படாத குடியிருப்புப் பகுதிகளாகும்'.

[2]குடும்ப வருமான மற்றும் செலவு கணிப்பீட்டாய்வு – 2009/10, இறுதி அறிக்கை, தொகை மதிப்பீட்டு திணைக்களம், இலங்கை

[3]குடும்ப வருமான மற்றும் செலவு கணிப்பீட்டாய்வு – 2009/10, இறுதி அறிக்கை, தொகை மதிப்பீட்டு திணைக்களம், இலங்கை

[4]இவ்வெண்கள் அனைத்து நகர்ப்புற குடும்பங்களையும் குறிப்பதுடன் வருமான குழுக்களுக்கேற்ப பிரிக்கப்படவில்லை.

ஆகும். இதே நேரம் தேசிய சராசரி 42% ஆக உள்ளது. இருந்தாலும் நகர்ப்புறம் வாழ் வறிய மக்களின் போசணை சக்தி உள்ளெடுப்பு, பொதுவாக கொழும்பு மாவட்டத்தில், ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது குறைவாகும் (DCS,2011). நகர்ப்புறப் பிரிவில் வருமான சமமின்மையும் இதே நிலையையே பிரதிபலிக்கின்றது. நகர்ப்புறத் துறையில் சராசரி குடும்ப வருமானத்தின் கினி குணகம் 0.48 ஆகவுள்ளதுடன் இது தேசிய சராசரியான 0.49 இலும் குறைவாகும். இச்சுட்டியானது நகர்ப்புறக் குடும்பங்களிடையிலான வருமான சமமின்மை ஒப்பீட்டளவில் குறைவாகும் எனக் காட்டுகின்றது. இக்காட்டிகள் நகர்ப்புறத் துறையானது வறுமை மற்றும் சமமின்மை தொடர்பாக தேசிய சராசரிகளுடன் ஒப்பிடுகையில் சிறந்த நிலையில் உள்ளதாக காட்டுகின்றது.

## 2.3 கொழும்பு நகரில் வறுமை

கிராமிய மற்றும் தோட்டப்புற துறையுடன் ஒப்பிடுகையில் நகர்ப்புறத் துறையினர் குறைந்தளவான இழப்புக்களைக் கொண்டுள்ளதென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதெனினும் உணவு செலவுகளிலான நகர்ப்புற உயர் சராசரிகள் நகர்ப்புறத் துறையின் நுகர்வுமயமாக்கத்தினது அதாவது, ஜீவனோபாயத்தின் எல்லாத் துறையினதும் முதல் நிலை மாறியாக பணம் உள்ளதன், ஒரு பிரதிபலிப்பாகும் என்பதை அழுத்தமாகக் குறிப்பிடப்பட வேண்டும். பொதுவாக அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களில் உள்ளது போல் கொழும்பில் தேசிய வறுமைக் கோட்டிலும் மேலாக வருமானங்களைப் பெறுகின்ற குடும்பங்கள் (வறியவர் எனும் பிரிவுள் உள்ளடங்காத) என குறிப்பிடப்பட்டவர்கள், மிகவும் மோசமான தர அளவீடுகளில், சனநெரிசலில், சுகாதாரமற்ற, பாதுகாப்பற்ற மிகவும் மோசமான உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படைத் தேவைளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைமையில் உள்ளனர் எனும் பார்வையுடன் இக்காட்டிகள் நோக்கப்பட வேண்டும். எனவே இழப்புக்களின் மையமாக குறைந்த வருமானமுள்ள அதே நேரம் ஓரளவு குறிப்பிடத்தக்க வருமானமீட்டும் குடும்பங்களும் கூட அடிப்படைச் சேவைகளையும் சுகாதாரமான மற்றும் பாதுகாப்பான வாழ்க்கைச் சூழலையும் பெற்றுக் கொள்ள முடியாமலுள்ளமையானது நகர்ப்புற வறுமையின் அழுத்தம் கொடுக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய அம்சமாகும்.

கொழும்பில் வாழும் பெரும்பாலான நகர்ப்புற வறியவர்கள் குறைந்த சேவைகள் வழங்கப்பட்டுள்ள குடியேற்றங்கள் (USS) என குறிப்பிடப்படுகின்ற சேரிகளிலும் குடியிருப்புக்களிலுமே வாழ்கின்றனர். ஏறத்தாழ 50% ஆன கொழும்பின் குடித்தொகையினர் வாழ்கின்ற கொழும்பு மாநகரசபை எல்லைகளுள் தற்போது 1735 தாழ் வருமானம்[5] பெறுகின்ற குடியிருப்புக்களுள்ளன (செவனதா,2012).

[5]குடியிருப்புக்களுள் 1626 குடியிருப்புக்கள் தரமுயர்த்தப்பட்ட மற்றும் முற்றாக தரமுயர்த்தப்பட்ட பிரிவுகளுள் அடக்கப்பட்டுள்ளன. இக்குடியிருப்புக்கள் தமது பொருளாதார நிலைமைகளை முன்னேற்றிக்கொண்டுள்ளமையையும் நீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள்ளும்

குறைந்த சேவைகள் வழங்கப்பட்டுள்ள குடியேற்றங்கள் கொழும்பு நகரினுள் அரச அல்லது தனியார் காணிகளில் அமைக்கப்பட்ட செறிந்த வாழிடத் தொகுதிகளினை கொண்ட பகுதிகளினை உள்ளடக்குவதுடன் இவ்வாழிடங்கள் அவர்களுக்குச் சொந்தமானவையல்ல. இவ்வாழிடப் பகுதிகள் உயர் குடித்தொகை அடர்த்தியை (ஒரு ஹெக்டயருக்கு சுமார் 820 பேர்[6] அல்லது கொழும்பு நகரின் சராசரியினது நான்கு மடங்கு) மற்றும் செறிவான வீடமைப்பு (ஒவ்வொரு அலகும் சராசரியாக 1.5 பேர்ச்சஸ்கள்) எனும் பொதுவான அம்சங்களை கொண்டுள்ள அதே நேரம் இங்கு வாழும் மக்களுக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் நீண்டகால நிலைமைகளே இப்பெயரினைக் கொடுக்கின்றது.

## 2.4 கொழும்பில் நகர்ப்புற வறுமையினது பரிமாணங்களும் இயக்கப்பாடும்

நகர்ப்புற வறுமையினது நிலையான தன்மையும் மாற்றத்தினது இயக்கப்பாட்டுடன் இணைந்த பிரச்சினைகளும் வறுமை தொடர்பான விடயங்களை முன்வைக்கின்ற செயற்பாட்டாளர்களின் ஆர்வத்திற்குறியதாகும். குடும்ப மட்டத்திலும் சமுதாய மட்டத்திலும் வறுமையில் தாக்கம் செலுத்துகின்ற பிரதான காரணிகளை பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடப்படலாம்.[7]

ஜீவனோபாய ஒழுங்குகள், வெளிநாட்டுத் தொழில்கள், சுயதொழில் மற்றும் தொழில் முயற்சி, முறைசாரா துறை செயற்பாடுகள் மற்றும் துறைமுகம்,கைத்தொழில்கள், புகையிரதத் திணைக்களம், நகர சந்தைகள் மற்றும் நகர சபை போன்ற நிறுவனங்களின் குறைந்த வருமானத்திற்கான முறைசார் தொழில்கள் போன்றன சிறந்த நிலையில் வாழும் மக்களது பிரதானமான வாழ்வாதார வழிகளாகவுள்ள அதே நேரம் வறிய குடும்பங்களிடையே குறைந்த திறனுடனான கூலித்தொழிலே பிரதானமான வாழ்வாதார வழியாகவுள்ளது.

தமது குடும்ப வருமானம் போதியதாகவுள்ளமையால் பெண்கள் வேலைகளில் ஈடுபடாது வீடுகளில் தங்கியிருப்பது உயர்ந்த வருமான நிலையிலுள்ள குடும்பங்களின் ஒரு அம்சமாக உள்ள அதே நேரம் வறிய குடும்பப் பெண்கள் வீட்டு வேலைகள் மற்றும் கட்டுமான தளங்களில் திறனற்ற கூலி வேலைகளில் ஈடுபடுவோராகவுள்ளனர்.

---

வகையில் வீட்டின் பௌதீக நிலைமைகளை முன்னேற்றிக் கொண்டுள்ளமையையும் இது சுட்டிக் காட்டுகின்றது.

[6]2001 தொகை மதிப்பீடு மற்றும் போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களது நிலப்பரப்பு மற்றும் இக்குடியேற்றங்களுள் வாழும் கொழும்பு குடித்தொகையினரின் விகிதம் என்பவற்றில் கிடைக்கப்பெறக்கூடியதாகவுள்ள தரவுகளின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டது.

[7]இப்பிரிவு CMC/PRIMUSS இற்காக வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வான கொழும்பில் போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களில் வறுமையின் பரிமாணங்கள் மற்றும் இயக்கப்பாட்டினை புரிந்துகொள்ளல்' எனும் ஆய்வின் அடிப்படையிலானதாகும்.

## 2.5 ஒப்பீட்டு மற்றும் முழு இடம்

சுற்று சூழலுடன் ஒப்பிடுகையில் குடியிருப்பின் அமைவிடம் மற்றும் குடியிருப்பினுள் மற்றும் குடித்தனத்தினுள்ளான இடவசதி ஆகியனவே சமூகத்தின் மற்றும் குடித்தனத்தின் ஆரோக்கியத்தை தீர்மானிக்கும் காரணிகளாகும். குடியிருப்பாளர்கள் தமது நல்வாழ்வு மட்டங்களையும் மீறி சுகாதார வசதிகள், கல்வி மற்றும் போக்குவரத்து வசதிகள் மற்றும் சேவைகளை பரந்தளவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அதே போல் கூலித் தொழில்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் சுயதொழில் மற்றும் தொழில் முயற்சிகளைச் செய்வதற்கான ஏனைய தொழில் முதல்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக குடியிருப்புக்கள் மத்திய இடமொன்றில் அமைந்திருப்பதானது பிரதான உடன்பாடான அம்சமாகும். மாறாக குடியிருப்புக்களினுள், வீட்டு அலகுகளது அளவு மற்றும் பொது இடங்கள் காணப்படாமை போன்றவற்றால் பிரதிபலிக்கப்படுகின்ற இடப்பற்றாக்குறையானது போதிய வசதிகள் வழங்கப் பெறாத குடியிருப்புக்களது (USS) எதிர் மறையான அம்சமாகும். இதனால் சமுதாய மட்டத்தில் பொழுது போக்கு செயற்பாடுகளுக்கு, நடமாட்டத்துக்கு தடையாய் இருப்பதுடன் நோய் பரவலை மோசமடையச் செய்வதுடன், குடித்தனங்களில் மரணம், திருமணம் போன்ற சமூக நிகழ்வுகளுக்கான இடப்பற்றாக்குறை, வீட்டு அடிப்படையிலான வருமானம் ஈட்டும் செயற்பாடுகளுக்கான இடப்பற்றாக்குறை ஆகியவற்றுடன் தனியுரிமையும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. இவ்வாறான நிலைமைகளை தவிர்த்து கொள்வதற்காக குடியிருப்பாளர்கள் சனநெருக்கடி குறைந்த இடங்களுக்கு, தம்மால் இயலுமான விதத்தில், குடிபெயர விளைகின்றனர். மேலும் இக்குடியிருப்புக்களின் பெயர் காரணமான களங்கம் மற்றும் காட்டப்படுகின்ற பாரபட்சம் என்பன பற்றியும் வயது வந்தோரும் விஷேடமாக சிறுவர்களும் கருத்தில் கொள்பவர்களாக உள்ளனர். இக்குடியிருப்புக்களில் வாழும் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள களங்கம் காரணமாக உயர் தரத்திலான பாடசாலைகளுக்கு நுழைவு பெறுவதிலும் தடையாகின்றது (குணத்திலக்க மற்றும் அப்துல் காதர், 2004).

சேவைகளை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொள்வதிலான பலவீனமான தன்மையானது போதிய சேவைகள் பெறப்படாத குடியிருப்புக்களினை வரையறுக்கின்ற மாறியாகும். பொருளாதார பரிமாணங்கள் வறுமையின் அடிப்படை காரணியாக உள்ள போதும் சேவைகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுக் கொள்ளலானது எப்போதும் குடும்ப வருமான மட்டங்களை குறித்து நிற்பனவாக இல்லை. குறித்த சேவைகளை பெற்றுக் கொள்ளல், குடிநீர் முதல்களின் நீர் வடிகாலமைப்பு, மலசல கூடங்கள் , மின்சாரம் மற்றும் பாதைகள் என்பன இங்கு கிடைக்கப் பெறாத ஆனால் குடியிருப்பாளர்களால் தேவைப்படுபவையாக இனங்காணப்பட முடியும். பொதுமக்கள் சேவைகளில் தங்கியிருப்பதானது வறிய குடியிருப்புக்களில் அதிகமாக உள்ளதுடன் பற்றாக்குறை அதிகமாக நிலவுவதன் காரணமாக பொருத்தமற்ற விதத்திலும் சட்டபூர்வமற்ற விதத்திலும் மலசலகூடங்கள் கட்டப்படவும் வழிவகுக்கின்றன. இந்நிலைமையானது குழாய் அடைப்புக்கள், கழிவு நீர் நிரம்பி வழிந்தோடல், கழிவுநீர் தொகுதிகள் கால்வாய்களுக்கு விடப்படல் தொடர்பான

பிரச்சினைகளுக்கு வழிவகுத்து விசேடமாக சிறுவர்களுக்கு சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகளை உருவாக்குகின்றன. இக்குடியிருப்புக்களில் பல வெள்ளம் ஏற்படக் கூடியதான சேற்றுநிலங்கள் மற்றும் கால்வாய் ஒதுக்கிடங்கள் போன்ற ஓரப்படுத்தப்பட்ட இடங்களில் அமைந்துள்ளமையால் கழிவு நீரகற்றல் தொடர்பான பிரச்சினைகளை முக்கியமாக எதிர் நோக்குகின்றன. குடியிருப்புக்களுக்கு செல்வதற்கான பாதைகளும் குடியிருப்புக்களிலுள்ள ஒழுங்கைகளும் மோசமான நிலைமைகளில் காணப்படுவதனால் இக்குடியிருப்புக்களை அடைவதில் தடைகளை ஏற்படுத்துகின்றன.

வாய்க்கால் நீர் தேங்கியிருக்கின்ற இடங்களுக்கும் யானைக்கால் போன்ற நோய்களைப் பரப்புகின்ற நுளம்புக் காவிகள் இனம்பெருகக் கூடிய இடங்களுக்கு அண்மையிலும் அமைந்துள்ளமையால் இக்குடியிருப்புக்களுள் மோசமான சுகாதார நிலைமைகள் காணப்படுகின்றன. மேலும் நெருக்கடி, உயர் குடித்தொகை அடர்த்தி, மிக அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள வீடமைப்புக்களும் நோய்கள் பரவும் வீதம் அதிகரிப்பதற்கு வழிவகுக்கின்றன.

நகர்ப்புற வறியோரின் நிலைமைகளை மேலும் மோசமாக்கும் ஒரு காரணியாக போதைப் பொருட்கள் மற்றும் மதுபான துஷ்பிரயோகமும் கொள்ளப்படலாம். இவற்றுக்கு அடிமையாதலே தனி நபர்களதும் குடும்பங்களதும் நல் வாழ்வின் வீழ்ச்சிக்கான பிரதான காரணியாக நோக்கப்படுகின்றது. அத்துடன் இவர்கள் மணவாழ்வில் உறுதியற்ற நிலையைக் கொண்டிருப்பதுடன், குற்றங்கள் மற்றும் வீட்டு வன்முறைகளுக்கு அதிகம் ஆளாகக்கூடியவர்களாக உள்ளனர். 2012 ஆம் ஆண்டில் உலக வங்கியால் கொழும்பில் வாழும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார மதிப்பீடு குடும்ப அங்கத்தவர்களின் மதுபானப் பாவனையானது குடும்பத்தினுள் நிலவும் பாதுகாப்பற்ற தன்மைக்கான ஒரு காரணமாகும் என வெளிக்காட்டியுள்ளது (UNHABITAT et al., 2012). மேலும் போதைப் பொருட்கள் மற்றும் மதுபானப் பாவனையானது வீடுகளுக்கு வெளியேயும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக இவ்வாய்வு வெளிக்காட்டியுள்ளது.

வீடமைப்பு மற்றும் காணி உரிமைகள் என்பன நகர்ப்புற வறுமையினது முக்கிய கூறுகளாகும். வீடமைப்பு நிலைமைகளிலான தொடர்ச்சியான முன்னேற்றம், மற்றும் வாழிட விரிவாக்கம் என்பன போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றவாசிகளது நல்வாழ்வின் முன்னேற்றத்திலான பிரதான மைல் கற்களாக கருதப்படலாம். இது வாழும் நிலைமைகளிலான முன்னேற்றம், சொத்துக்களிலான அதிகரிப்பு, வதிவிட உரிமையை பாதுகாத்துக்கொள்ளல் (பிரதானமாக நிலையான கட்டட அமைப்புக்களினூடாக) என்பன விதத்திலும் மற்றும் புகழ் மற்றும் கண்ணியம் ரீதியில் சமூக நிலைமைகளில் உள்ள அதிகரிப்பு தொடர்பானதாகும். மேலும் மின்சாரம் போன்ற ஏனைய சேவைகளை குடியிருப்பாளர்கள் பெற்றுக்கொள்வதனை அதிகரித்துள்ளதுடன் தமது வீடுகளை வாடகைக்கு விடுவதன் மூலம் அல்லது வீட்டு அடிப்படையிலான செயற்பாடுகள் மூலம் வருமானமீட்டுவதற்கான வாய்ப்புக்களையும் வழங்குகின்றது.

போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களில் செயற்படுகின்ற பல சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் (CBO) இருப்பினும் பெரும்பாலான சமுதாயங்களில் சமுதாய அடிப்படையிலான அமைப்பினது செயற்பாடுகள் குறைவாகும். சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் குடியேற்றங்களின் நோக்கங்கள் மற்றும் முறைப்பாடுகளை அதிகாரிகளுக்கு கொண்டு செல்வதில் நேரடியாக குரல் எழுப்பினாலும் இப்போதிய வசதிகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களது நல்லாழ்வின் முன்னேற்றத்தில் அதிக பங்கினை வழங்குவனவாக முறைசாரா மற்றும் முறைசார் வலையமைப்புக்கள் கருதப்படுகின்றன. குடியேற்ற மக்களது உறுதித்தன்மை (தொடர்ச்சியான குடிபெயர்வுக்கு உள்ளாகுபவற்றிலிருந்து வேறுபட்டு), அதிக காலம் குடியிருப்பில் வாழுதல் என்பன இவ்வலையமைப்புக்களை விருத்தி செய்தல் மற்றும் நிலைப்பேறடையச் செய்தலில் உதவுவனவாக கருதப்படலாம்.

## 3. கொழும்பில் நகர்ப்புற வறுமையை எதிர்கொள்ளல்

இச்சுருக்கக் கட்டுரையில் முன்னர் குறிப்பிடப்பட்ட பதியப்பட்டுள்ள குறைந்த வேகத்திலான நகரமயமாக்கம் மற்றும் கிராமிய குடித்தொகையினரால் முகம் கொடுக்கப்படுகின்ற பிரச்சினைகள் காரணமாக 1970 ம் ஆண்டுகள் வரை அரச தலையீடுகளுக்காக விசேட முன்னுரிமை கொடுக்கப்பட்டதாக நகர்ப்புற வறுமை கருதப்படவில்லை. மந்த வேகத்திலான நகரமயமாக்கம் மற்றும் நகரில் குறைந்த எண்ணிக்கையான சேரி மற்றும் குடிசைக் குடியேற்றங்கள் காணப்பட்டமையும் நகர்ப்புறம் வாழ் வறியோரின் ஜீனோபாயங்களில் அரச தலையீடுகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்களாகும். 1970 மற்றும் 1980 களில் நகர்ப்புற வறுமையின் வளர்ந்து வரும் பிரச்சினைகள் படிப்படியாக இனங்காணப்பட்டதனைத் தொடர்ந்து, அரசினால் மேற்கொள்ளப்பட்ட பிரதானமான செயற்பாடு வீடமைப்பு அபிவிருத்தியினாலானதாகும். இது கொள்கை மற்றும் சீரமைப்பு மாற்றங்கள் (உதாரணம் 1973 இனது வீடமைப்பு சொத்து சட்டத்தில் உச்ச வரம்பு) மற்றும் நேரடி தலையீடுகளுக்காக அரச முகவர்களை நிறுவியமை (உதாரணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைகள் போன்றன) உள்ளடங்குகின்றது. இவ்வரச முகவர்களூடாக அரசாங்கம் குறைந்த வருமானமீட்டும் குடும்பங்களுக்கு வீடுகளை நிறுவிக் கொடுத்தது. இதற்கு மேலதிகமாக, கொழும்பு மாநகர சபையினது பொது உதவித் திணைக்களத்தினால் மிகவும் தாழ்ந்த வருமான மட்டங்களிலான குடும்பங்களுக்கு பணம் வழங்கும் திட்டங்களும் இருந்தன. கொழும்பு மாநகர சபையினது பொது மக்கள் சுகாதார திணைக்களமும் இந்நகரில் சேரிப்புறங்களில் வாழும் மக்களது வாழ்க்கையினை முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுல்படுத்திக் கொண்டிருந்தது. இருந்தாலும் 1970 களின் நடுப்பகுதிகளளவில் நகர்ப்புற வறுமையானது வீடமைப்பு, சேவைகள் வழங்கல், சுகாதாரம், கல்வி மற்றும் திறன் விருத்தி மற்றும் சமுதாய அபிவிருத்தி என ஒரு முழுமையான அணுகுமுறையை வேண்டியுள்ள விசேட பிரச்சினையொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இப்பிரச்சினை பற்றி பெரிதும் விழிப்புணர்வு ஏற்பட்டதையடுத்து இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தேவை

எழுந்தது. இதே நேரம் 2000ஆம் ஆண்டினது மெகா பொலிஸ் திட்டம் போன்ற நகரமட்ட பாரிய திட்டங்கள் நகர்ப்புற வறுமை எனும் பிரச்சினையை குறிப்பாக நோக்கவில்லை.இத்திட்டம் நகரத்திலிருந்து இனங்காணப்பட்ட புதிய இடங்களுக்கு கைத்தொழில் மற்றும் சேமிப்பகங்களை இடம் பெயர்க்கவும் அண்மைய மாநகர சபையானது சிறீ ஜயவர்தனபுரக் கோட்டையினை நிர்வாக தலைநகரமாக விருத்தி செய்யவும் திட்டமிட்டிருந்தது. இதன் போது இழப்பினது பல்வேறு கூறுகளையும் இலக்கில் கொண்டதாக பல 'நிகழ்ச்சித் திட்டங்கள்' மற்றும் 'செயற்றிட்டங்கள்' பல்வேறு அரச முகவர் நிறுவனங்களால், நிதி வழங்குநர்கள் போன்ற அரச சாரா அமைப்புக்கள், சமுதாய மட்ட அமைப்புக்கள் மற்றும் சில சமயங்களில் மரபு வழி தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுத்தப்பட்டு வந்தன.

போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களில் வாழும் மக்கள் சட்ட மற்றும் சீராக்க நடவடிக்கைகளுக்கு கீழ்ப்படிகிறார்களோ இல்லையோ கையறுநிலை காரணமாக அவர்கள் முகம்கொடுக்கின்ற பல தரப்பட்ட மற்றும் சிக்கலான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதனை தொடர்ந்து நகர்வானது நகர்ப்புற வறுமையை நோக்கியதாக திசைமுகப்படுத்தப்பட்டது. போதிய சேவைகள் வழங்கப் பெறாத இக்குடியேற்றவாசிகள் நகரினது சட்டபூர்வமற்றவர்கள் என்பதன் அடிப்படையில் முன்னர் ஓரளவே செயற்பட முடியுமாக இருந்தமையால் கொழும்பு மாநகர சபை போன்ற அரச முகவர் நிறுவனங்களுக்கு இவை இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டமையானது ஒரு பெரும் முன்னேற்றப் படியாகும். கொழும்பு மாநகர சபையானது கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு இலவசமாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக பல சேவைகள் வழங்கிய நீண்ட வரலாற்றினை கொண்டிருப்பினும் (உதாரணம் தடுப்பு மற்றும் பரிகார சுகாதார பராமரிப்பு, பொது உல்லாச வசதிகள், தொழில் பயிற்சிகள்) இவை குறிப்பாக போதிய சேவைகள் வழங்கப் பெறாத குடியேற்றங்களையோ அல்லது அவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளையோ இலக்காகக் கொண்டிருக்கவில்லை (குணதிலக்க மற்றும் அப்துல் காதர், 2004).

போதிய சேவைகள் வழங்கப்படாத குடியேற்றங்களது சட்டரீதியான தடைகளையும் மீறி அவர்களது அபிவிருத்திக்கு வழி செய்யும் குறித்த குறிக்கோளுடன் முன்வைக்கப்பட்ட அங்கத்தவர்களது ஒதுக்கீடானது இக்குடியேற்றங்களை நோக்கிய கொழும்பு மாநகர சபையினது கொள்கையில் ஒரு வடிகாலாக நோக்கப்படக் கூடிய ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும். 1996இலிருந்தே கொழும்பு மாநகர சபை அங்கத்தவர்களாக தேர்வு செய்யப்படுகின்ற 53 பேரில் ஒவ்வொருவருக்கும் வருடாந்தம் குறித்த ஒரு தொகையினை போதிய சேவைகள் வழங்கப்பெறாத இக்குடியேற்றங்களது வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றுவதற்கென செலவழிப்பதற்காக ஒதுக்கப்பட்டு வந்துள்ளது (குணதிலக்க மற்றும் அப்துல் காதர், 2004). 2013 இல் ரூபா 3 மில்லியன் தொகை ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்டதுடன் இது வருட மொத்தத் தொகையாக ரூபா 159 மில்லியனாகும். கொழும்பு மாநகர சபைக்கான அங்கத்தவர்கள் போதிய சேவைகள்

வழங்கப் பெறாத குடியேற்றங்களுள் இந்நிதி ஒதுக்கீட்டினை தீர்மானிப்பதற்கு உயர் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளனர். கடந்த வருடங்களில் கூடுதல் பணம் வடிகால்கள் மற்றும் கழிவு நீர் அகற்றல் முறைகளை/வசதிகளை விருத்தி செய்வதிலும் இதனை அடுத்து குடியேற்றங்களது உட்கட்டமைப்பு வசதி மட்டங்களை (பாதைகளை/ ஒழுங்கைகள் அமைத்தல், வீதி விளக்குகள் போன்றன) மற்றும் வீடமைப்புக்குமே செலவழிக்கப்பட்டது. இவ் அங்கத்தவர்களது ஒதுக்கீடு கொழும்பு மாநகர சபைக்கு, போதிய சேவைகள் வழங்கப் பெறாத குடியேற்றங்களின் விருத்திக்கு கூடுதல் முதலீடு செய்வதற்கு ஆற்றலைக் கொடுத்துள்ள அதே நேரம், இம்முறையினால் இத்திட்டம் அதிக அரசியல் அதிகாரத்தினுள்ளாக்கப்பட்டுள்ளதுடன் மாநகர சபையினது திட்டமிடல் மற்றும் கட்டுப்பாடு மற்றும் திசைமுகப்படுத்தல் என்பனவும் வலுக்குறைக்கப்பட்டுள்ளன. 1990 களிலிருந்து குறிப்பாக இக்குடியேற்றங்களது வாழும் நிலையினை இலக்காகக் கொண்டுள்ள ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன (குணதிலக மற்றும் அப்துல் காதர், 2004).

**அட்டவணை 1: போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களில் வாழ்க்கை நிலைமைகளை இலக்குப்படுத்திய நிகழ்ச்சித்திட்டங்கள்**

| நிகழ்ச்சித்திட்டம் | நோக்கம் | காலம் | கூட்டிணைப்பு |
|---|---|---|---|
| சுத்தமான குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம் | குறித்த தளத்திலான அபிவிருத்தியும் தரவு சேகரித்தலும் | 1994-1998 | வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு (MHUD), உலக வங்கி |
| நகர அகிவிருத்தி மற்றும் வீடமைப்பு/ ரியல் எஸ்டேட்டிலான ஜனாதிபதி செயலணிக் குழு ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் தனியார் நிறுவனம் (REEL) | உயர் செறிவான வீட்டுத் திட்டங்களுக்கு மீள இடப்படுத்தலினூடாக வர்த்தக காணிகளை அபிவிருத்தி செய்தல் | 1994- | இலங்கை அரசாங்கம் (GOSL), நகர முகவர்களை பங்குதாரர்களாக கொண்ட தனியார் கம்பனிகள் |
| நிலைபேறான நகர உறவு நிகழ்ச்சித்திட்டங்கள் | சொந்த நிலங்களின் வர்த்தகத்தினூடாக மீளஇடப்படுத்தல் | 2000-2001 | மனித குடியேற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் மத்திய நிலையம் (UNCHS) |

| நிகழ்ச்சித்திட்டம் | நோக்கம் | காலம் | கூட்டிணைப்பு |
|---|---|---|---|
| கொழும்பு போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களது பங்கேற்புடனான முன்னேற்றம் (PRIMUSS) | நீர் மற்றும் கழிவகற்றல், சமுதாய பலப்படுத்தல் | 2002-2005 | கொழும்பு மாநகர சபை (CMC), ஜேர்மன் தொழிநுட்ப கூட்டுறவு சங்கம் (GTZ), பொருளாதார கூட்டுறவு மற்றும் அபிவிருத்திக்கான மத்திய அமைச்சு (BMZ) |
| வறுமை குறைப்பு நிகழ்ச்சித்திட்டம் | போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களது பொருளாதார அபிவிருத்தி, தள தரமுயர்த்தல், சமுதாய பலப்படுத்தல் | 2001-2003 | CMC, UNCHS, சர்வதேச அபிவிருத்தி திணைக்களம் (DFID) |
| நகர அடிப்படை சேவைகள் நிகழச்சித்திட்டம் | போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களுக்கு பொது வசதிகளை வழங்குதல்- மலசலகூடங்கள்,குழாய்கள், குளியலறைகள்-கொழும்பு மாவட்டத்தில் (நகர மற்றும் பாரிய கொழும்பு) | 1979-1993 | ஐக்கிய நாடுகள் அமைப்பினது சிறுவர் நிதியம் (UNICEF), CMC, தேசியு வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NHDA) |
| சுகாதார நகர நிகழ்ச்சித்திட்டம் | குடியிருப்பாளர்களுக்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தல் | 2001-2004 | உலக சுகாதார தாபனம் (WHO) |
| உள்ளூர் பிரதேச நிலைபேறான அபிவிருத்தி அவதானிப்பகம் (LASDO) | வறுமை மையப்படுத்திய நகரப்புற திட்டமிடலுக்காக எண்ணியல் வரைபட அமைப்பு | 2001-2003 | CMC, ஐரோப்பிய ஆணைக்குழு (EC), பாரிஸ் மற்றும் மட்ரிட் நகரங்கள், ஆசிய நகரங்கள் |

| நிகழ்ச்சித்திட்டம் | நோக்கம் | காலம் | கூட்டிணைப்பு |
|---|---|---|---|
| நகர மைய செயற்பாட்டு ஆய்வு செயற்திட்டம்: கொழும்பு நகரம் | நகர அடிப்படையிலான சேவைகளை சிறந்த முறையில் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றலை பலப்படுத்தல், சூழல் மாசடைதல் மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கான பலவீனமான தன்மையினை குறைத்தல் | 2006-2010 | CMC, வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA), சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிலைம் (IDRC), சேவநாதா |
| கொழும்பு சமுதாய பலப்படுத்தல் செற்திட்டம் | போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களது வாழ்வாதாரங்கள் மற்றும் வாழும் சூழலை முன்னேற்றுவதற்காக கொழும்பு மாநகர சபை மற்றும் ஏனைய அரச, அரச சாரா நிறுவனங்களுடன் உயிர்ப்பாக இணைந்து செயற்படுவதற்காக அறிவு மற்றும் திறன்களை கொண்டு கொழும்பு நகர சமுதாயங்களை பலப்படுத்தல் | 2011-2015 | CMC,சேவாநாதா, DFID/UK |

மூலம்: குணதிலக மற்றும் அப்தல் காதர், 2004, கொழும்பு மாநகர சபை இணையத்தளம் , மார்ச் மாதம் 2014 பெறப்பட்டது http://www.cmc.lk/index.php?option=com_content&view=archive&Itemid=80

மேலதிகமாக அரசாங்கத்துடன் அரச சாரா நிறுவனங்களும் எனைய தனியார் அமைப்புக்களும் நகர்ப்புறத் துறையினரின் பாதுகாப்பான குடிநீர், கழிவகற்றல் மற்றும் கால்வாய் உள்ளடங்களாக வறுமை தொடர்பான தலையீடுகளுக்கு ஆதரவு வழங்கும் வண்ணம் பல்வேறு பிரதேசங்களில் வேறுபட்ட கொள்திறன்களில் ஈடுபட்டுள்ளன. வறுமை ஆராய்ச்சி நிலையம் (2010), சூழல் கூட்டுறவு ஆசியாவினது (Eco–Asia) ஒத்துழைப்புடன் வித்தியாசமான மாதிரிகளின் செயற்திறனாற்றுகை பற்றிய அறிவினை வழங்கவும் நகர்ப்புற வறிய மக்களுக்கு பொருத்தமான, பயனுள்ள மற்றும் வினைத்திறனான நீர்ச் சேவை செயற்திட்டங்களை வடிவமைக்கவும் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஐந்து வித்தியாசமான நீர்ச்சேவை வழங்கல் மாதிரிகளில் ஒரு ஒப்பீட்டு மதிப்பீட்டினை நடாத்தியது. மதிப்பீடானது பொருத்தப்பாடு, பயன்படுதன்மை, வினைதிறன், தாக்கம் மற்றும் நிலைப்பேறான தன்மை என ஐந்து வினாக்களை பயன்படுத்தி மேற் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாதிரியும் மேலே

குறிப்பிடப்பட்ட கூறுகளுக்கேற்ப அவற்றிற்கு உரிய நன்மைகளையும் தீமைகளையும் கொண்டுள்ளதுடன் நகர்ப்புற வறிய சமுதாயங்களுக்கான நீர் பெற்றுக் கொள்ளும் வழிகளை முன்னேற்றுவதற்கான சாத்தியப்பாடுகளையும் கொண்டுள்ள அதே நேரம் வருமான மீட்டாத நீர் வழங்கலையும் குறைக்கின்றது.

வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் நகர்ப்புற வறிய மக்களிடையேயான நீர்ச்சேவைகளுக்கான கேள்வியை அறிந்து கொண்டு வறிய மக்களை மையப்படுத்தியதாக நீர்ச்சேவைகளை வடிவமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு ஆய்வானது (2009) வறிய மக்களுக்கு நீரிணைப்புக்களை வெற்றிகரமாக வழங்கி வரும் பல நிகழ்ச்சித் திட்டங்கள் தற்போதுள்ளதாகவும் வறிய மக்களை மையப்படுத்தியதாக நீர்ச்சேவைகளை வழங்குவதற்கான எந்தவொரு நிகழ்ச்சித் திட்டமும் அக்குடும்பங்களுக்கு எவ்வாறு போதிய வடிகாலமைப்பு மற்றும் கழிவகற்றல் இணைப்புக்களை வழங்கப்படப் போகின்றன என்பதையும் முன்வைக்க வேண்டிய தேவையுள்ளதாகவும் வெளிக்காட்டியுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்படக்கூடிய போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களது ஜீவனோபாயங்கள் மற்றும் பலவீனமான தன்மையிலான புரிந்துணர்வினை அதிகரிக்கவும் சமுதாய வாழ்வாதார ஒழுங்குகளுக்கேற்ப அவற்றை தரப்படுத்துவதற்கான ஒரு சட்டகத்தினை விருத்திசெய்வதற்கும் கொழும்பு நகரின் வெள்ளத்தினால் பாதிக்கப்படக்கூடிய குறைந்த வருமானம் பெறும் குடியேற்றங்களில் அண்மையில் மற்றுமொரு ஜீவனோபாய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது (UNHABITAT, CEPA et al., 2012). கணிப்பீட்டாய்வுக்குட்படுத்தப்பட்ட சமுதாயங்களில் 76%ஆனவை வெள்ளத்தினால் பாதிக்கப்படக்கூடியவையாக இருந்ததுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட சமுதாயங்கள் மோசமான மலசல கூட வசதிகள், மோசமான கழிவகற்றல் இணைப்புக்கள் காரணமாக மழைக்காலங்களில் நிரம்பி வழிந்தோடக் கூடியனவாகவும் உள்ளவையென கண்டறியப்பட்டுள்ளது.

## 4. நகர்ப்புற வறுமையை எதிர்கொள்வதிலுள்ள சவால்கள்

இலக்குக்குரிய தலையீடுகளின் தேவையுள்ள குறித்த விடயப் பரப்பாக நகர்ப்புற வறுமை இனங்காணப்பட்டதிலிருந்து, இது முகம் கொடுக்கும் சவால்கள் மூன்று பிரதான முதல்களிலிருந்து தோன்றுவனவாக உள்ளன

i. நிறுவன தோற்றவமைப்பினது சிக்கற்தன்மை
ii. கொள்கை திட்டவமைப்பினது பலவீனமான தன்மை
iii. வறுமை மற்றும் அதன் தாக்கங்கள் பற்றிய மட்டுப்படுத்தப்பட்ட அறிவு

## 4.1 நிறுவன தோற்றவமைப்பு

போதிய சேவைகள் வழங்கப் பெறாத குடியேற்றங்களது அபிவிருத்தியூடாக நகர்ப்புற வறிய மக்களது வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றுவதானது சீராக்கல் திட்டவமைப்பு, சேவை வழங்கல்,உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாய்ப்புக்கள் வழங்கலுக்கு பொறுப்பான பல குறித்த நகர மற்றும் தேசிய நிறுவனங்களை உள்ளடக்குகின்றது. நகரத்தினுள் நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ள கொழும்பு மாநகர சபையே கொழும்பு நகரின் ஆளும் அமைப்பாகவும் முதல் நிலை சீராக்கல் மற்றும் சேவை வழங்கல் நிறுவனமாகவும் உள்ளது. இவ்வாறு இது நகரினுள் பரந்தளவான திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் தொழிற்பாடுகளை கொண்டுள்ளது.

இருந்தாலும் 1970 இன் பிற்பட்ட காலங்களிலிருந்து குறித்த விடயங்களை முன்வைப்பதற்காக பல நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கையின் கொழும்பு உள்ளடங்கலாக சகல நகர்ப்புற பிரதேசங்களிலும் காணிப் பயன்பாட்டுக் கொள்கையில் விசேட முக்கியத்துவத்துடன் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபை (UDA) அமைக்கப்பட்டது. கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் குடியேற்றங்களை நிர்மாணிக்கவும் சேவைகளைப் பேணவும் பொது வசதிகள் வாரியம் (CAB) நிறுவப்பட்டது. தேசிய வீடமைப்பு அதிகார சபை வீட்டுக் கடன்களை வழங்குவதுடன் அதிகார சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளது வீட்டு உரிமைகளையும் சீராக்குகின்றது. ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் லிமிடட் (REEL) நிர்மாணிக்கப்பட்டதுடன் தொடர்மாடி வீட்டுத் தொகுதிகளது நிர்மாணமானது NHDA இனது சில அபிவிருத்தி தொழிற்பாடுகளை பெற்றுக்கொண்டது. தேசிய ரீதியான சேவை வழங்குநர்களான இலங்கை மின்சாரசபை (CEB) மற்றும் தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு சபை (NWSDB) என்பனவும் போதிய சேவைகள் வழங்கப் பெறாத குடியேற்றங்களிலும் தொழிற்படுகின்றன. கொழும்பு மாநகர சபை மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களது வாழ்க்கைத் தரங்களை முன்னேற்றுவதற்காக தீர்மானம் எடுத்தல் மற்றும் செயற்றிட்ட செயற்பாடுகளின் அமுலாக்கத்தில் ஈடுபடுவதற்கு சமுதாயத்தினை ஒழுங்கமைப்பதற்கும் இயக்கத்திற்கும் 1980 களில் சமுதாய அபிவிருத்தி சபைகள் (CDC) நிறுவப்பட்டன. சமுதாய அபிவிருத்தி சபையினது பிரதான நோக்கம் வீடமைப்பினை முன்னேற்றல் மற்றும் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் செயற்திட்டங்களது அமுலாக்கல் என்பனவாகும். நகர்ப்புற குடியேற்ற அதிகார சபையானது 2008 இல் அன்றைய நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் புனித பிரதேச பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கீழ் நகர்ப்புற குடியேற்ற அபிவிருத்தி தொடர்பாக தேசியக் கொள்கையை உருவாக்கல் மற்றும் அக்கொள்கையின் அமுலாக்கத்தினை போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களில் வாழும் மக்களது வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றுவதற்காக உறுதி செய்தல் எனும் குறிக்கோள்களுடன் நிறுவப்பட்டது. நகர்ப்புற குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபையானது தற்போது நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றது. பாதுகாப்பு

மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சும் கூட போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களது வாழ்க்கை நிலைமைகளை உயர்த்துவதிலும் வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் பாதை மேம்பாட்டுக்கும் மேலாக நகரினை அழகுபடுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது. கொழும்பு நகரின் போதிய சேவைகள் வழங்கப் பெறாத குடியேற்றங்களில் வாழும் சேரி வாசிகளுக்கு மீள்குடியேற்றத்திற்காக வீடுகளை அமைப்பதில் நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபையும் ஈடுபட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் இத்துறையில் பிரதான பங்கு வகிக்கின்றன. அதே நேரம் விசேட தொழிற்பாடுகள் மற்றும் சீராக்கல் ஆணைகளுடன் ஏனைய பல நிறுவனங்களுமுள்ளன. பல்வேறு நிறுவனங்கள் ஒரே மாதிரியான ஆணைகளையும் விடயப் பொறுப்புக்களையும் கொண்டுள்ளமையால் வினைத்திறனற்ற நிலையொன்றினைக் காணக்கூடியதாகவுள்ளது. நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று மாற்றமான ஆணைகளை கொண்டுள்ள போது நிலைமை இன்னும் மோசமாகும். உதாரணமாக குடியேற்றங்களுக்கு சேவைகள் வழங்கப்படும் போது இது இவர்களது தரத்தினை உயர்த்துவதுடன் கூடுதல் உறுதித் தன்மையையும் உரிமையுணர்வையும் தோற்றுவிக்கின்றதுடன் இது மீள்-இடமமைத்தல்  கொள்கைக்கு முரணானதாகும். இன்னும் தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு சபையினது, குடும்பங்களுக்கு நீரைப் பெற்றுக்கொள்வதற்கு சீராக்கப்பட்ட வழிகளை வழங்குவதன் மூலம் வருமானம்  பெறப்படாத நீர் வழங்கலை வருமானம் பெறும் நீர் வழங்கலாக மாற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டம், மீள் இடமமைத்துக் கொடுப்பதற்கான முயற்சிகளுக்கு நேர் மாறானதாகும். நகர்ப்புற வறுமை மீதான குறித்த கவனம் அதிகரித்து வருகையில்  அதிகார நிறுவனங்களது திசைமுகப்படுத்தல் மாறும் நிலையிலுள்ளமையால்  சூழ்நிலையானது மோசமாக்கப்படுகின்றது. திசைமுகப்படுத்தலிலான இவ்வாறான மாற்றங்களை தொடர்ந்து இந்நிறுவனங்களது சட்ட நிலைமைகளில் விரைவான மாற்றங்கள் ஏற்படுத்தப்படாமையும் நிலைமையை இன்னும் சிக்கலாக்குகின்றது. இதனால் கொழும்பு மாநகர சபை போன்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற வறுமையை மையப்படுத்திய பல செயற்பாடுகள் அவற்றின் சட்ட ஆணைகளுக்கு கட்டுப்பட்டில்லாமல் உள்ளன. நகர்ப்புற வறுமை ஒழிப்பில் உயிர்ப்பாக செயற்பட்டு வரும் அரச சாரா அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் அரச நிறுவனங்கள் இத்தடைகளை வெற்றி கொள்கின்றன.

கொழும்பு நகரினை அழகுபடுத்தும் செயன்முறையில் முக்கிய இடங்களில் சில பொழுதுபோக்கு தளங்களை அமைப்பதில் முதலீடு செய்வதன் உரிமை தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கொழும்பு மாநகர சபையிடையில் ஓரளவு பரபரப்பான நிலைமை காணப்பட்டது (சண்டே டைம்ஸ், 2011). கொழும்பு நகரிலான இப்புதிய அபிவிருத்தி செயன்முறையினால் குடித்தொகையின் சிறிய விகிதத்தினரே நன்மை பெறுவதனால் இது சமநிலையற்ற செயன்முறையென விவாதிக்கப்பட்டது. மேலும் தேவையானவாறு பொதுக்கலந்துரையாடல்கள் இல்லாமை மற்றும் நடைபெறுகின்ற இடம்பெயர்வுகள், மீள்குடியேற்றங்களை போதியளவு கண்காணிக்காமை  போன்றன அவர்களது நல்வாழ்வினை பாதிக்கின்றன (CEPA,2013).

## 4.2 கொள்கை திட்டவமைப்பு சட்டகம்

நிறுவன மற்றும் சட்டதிட்டவமைப்பு சட்டகங்கள் தொடர்பாக முகம் கொடுக்கப்படுகின்ற பிரச்சினைகள் இலங்கையில் நகர்ப்புற வறுமை பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டுள்ள பலவீனமான கொள்கைத் திட்டமைப்புக்களின் பிரதிபலிப்பாகும். கொழும்பு நகரின் அபிவிருத்திக்கான அனைத்து திட்டமிடல் முயற்சிகளும் பிரதானமாக இடம் சார்ந்த திட்டமிடல், சேவைகளை முறைப்படுத்தல் மற்றும் நகர விரிவாக்கத்திற்காக உட்கட்டமைப்பு வசதிகளை சீராக்கல் மற்றும் நகரின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்தல் தலையீடுகளுக்காக நகரினை ஒரு தனி அலகாக கொண்டு நோக்கப்பட்டுள்ளது. இத்திசைமுகப்படுத்தலானது 1978 கொழும்பு பாரிய திட்டத்திலும் 1985 கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம், 1996 கொழும்பு மத்திய பிராந்திய கட்டமைப்பு திட்டம், 2000 மெகாபொலிஸ் திட்டம் அதே போல் 2011-2030 தேசிய பௌதீக திட்டத்திலும் பிரதிபலிக்கப்படுகின்றது. நகர்ப்புற வறுமையினது நோக்கிலிருந்து பார்க்கும் போது இத்திட்டங்களின் குறிப்பிடக்கூடிய குறைபாடானது நகர்ப்புற வறுமையினது சிக்கற்தன்மையினை படிப்படியாக ஏற்றுக்கொள்வதை விடுத்து தாழ் பிரதேசங்களில் வீடமைப்பு, வெள்ள மற்றும் வடிகால் முகாமைத்துவம் ஆகியனவற்றை தொடர்ந்தும் விசேட இலக்குக்குரிய தொகுதியாக கருதுவதாகும்.

மிக அண்மையில் இலங்கையின் நகர்ப்புற தூரநோக்கினை கொள்கை மற்றும் செயற்பாட்டுக்கு மாற்றுவதற்கு ஒரு நகர்ப்புற கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கொள்கை ஆவணத்திற்கேற்ப, இலங்கையின் நகர்ப்புற தூரநோக்கானது ஐந்து மெட்ரோ பகுதிகளுள் போட்டியான, சூழல் நிலைபேறான, ஒன்றுடன் ஒன்று இணைந்த நகரங்கள் சேர்ந்த தொகுதியொன்றினை விருத்தி செய்வதும் 2020 ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பொருளாதார ரீதியில் முடியுமான மற்றும் போதியளவான நகர்ப்புற குடியிருப்பினை வழங்குவதும் ஆகும். இப்பிரச்சினைகளை முன்வைப்பதற்கு நான்கு தூண்களின் அடிப்படையிலான ஒரு பன்முனை உத்தி தேவையெனவும் இவ்வாவணம் எடுத்துக் காட்டுகின்றது. அந்நான்கு தூண்களாவன:

- உத்தியான, ஒன்றிணைந்த தேசிய, பிராந்திய மற்றும் நகர்ப்புற திட்டமிடலை நோக்கி நகர்தல்
- நிலைபேறான நிதியிடல் மற்றும் பிராந்திய, நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகள் முன்னேற்றத்தினை உறுதிப்படுத்தல்
- அடிப்படையிலான நகர முகாமைத்துவம் மற்றும் நிதிக்கான புதிய கருவிகளை விருத்தி செய்வதன் மூலம் பொறுப்பான சேவை வழங்குநர்களாக நகர உள்ளூர் அதிகாரிகளை மீளநிலைப்படுத்தல்
- நகர வாழ்தகவினை முன்னேற்றுவதற்காக வினைத்திறனான மற்றும் நிலைபேறான காணி மற்றும் வீடமைப்பு அபிவிருத்தியை ஊக்குவித்தல்

## 4.3 நகர வறிய மக்கள் தொடர்பான அறிவு மட்டத்தினை விரிவாக்குவதை நோக்கிய நகர்வு

இலங்கையில் வறுமை தொடர்பான அறிவினை கட்டியெழுப்புதல், கொள்கை உருவாக்கம் மற்றும் விமர்சன மதிப்பீடு என்பவற்றின் பிரதான முக்கிய கவனமானது கிராமிய பொருளாதாரங்களும் சமுதாயங்களுமாகவே இருந்துள்ளன. தேசிய அதாவது கிராமிய வறிய மக்களிடமிருந்தும் குறிப்பிடத்தக்க விதத்தில் வித்தியாசமான இயக்கப்பாடுகளையும் வறுமை பரிமாணங்களையும் அனுபவித்து வருகின்ற இலங்கை வாழ் நகர்ப்புற வறிய மக்கள் ஒரு விசேட குழுவாக மிகக் குறைந்தளவே இனங்காணப்பட்டுள்ளனர்.

1990ஆம் ஆண்டுகள் வரை நகர்ப்புற வறியோர் பற்றிய போதிய அறிவின்மை மற்றும் குடும்ப நுகர்வு மற்றும் வீடமைப்பில் தாக்கம் செலுத்தக்கூடியதான மிகவும் எளிய, அடிப்படையான தலையீடுகளாக அரசின் வறுமை தொடர்பான தலையீடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை என்பவற்றுக்கிடையில் ஒரு வட்ட உறவு விருத்தியடைந்திருந்தது. இருந்தாலும் அரச, ஏனைய நிறுவனங்களிடமிருந்து நகர்ப்புற வறுமை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டதை தொடர்ந்து கிடைக்கப்பெறக்கூடியதாகவுள்ள வளங்களின் உச்ச பயன்பாடு மற்றும் திருப்திகரமான விளைவுகளை அடைந்துகொள்வதை உறுதிசெய்தல் என்பவற்றை மட்டுப்படுத்தும் குறிப்பிடத்தக்க ஒரு தடையாக இப்பிரச்சினை தொடர்பாகவும் சாத்தியமான தீர்வுகள் தொடர்பாகவும் போதிய அறிவின்மை இனங்காணப்பட்டது. இவ்விடயத்திலும் விருத்திசெய்யப்பட்டுள்ள தரவு தளங்களிலும்[8] அதிக ஆய்வுகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனினும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற, நிகழ்ச்சித்திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்ற உத்தி மற்றும் திட்டமிடல் மட்டங்களில் மிகக் குறைந்தளவான அறிவின் பின்னணியே உள்ளது எனும் பலமான உணர்வு காணப்படுகின்றது. அண்மையில், 2011ஆம் ஆண்டில், நகர அபிவிருத்தி அதிகார சபை இலங்கையின் போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்ககள் அனைத்திலும் ஒரு கணிப்பீட்டாய்வினை மேற்கொண்டது. சேவநாதா கொழும்பு மாநகர சபையுடனிணைந்து 2012 ஆம் ஆண்டில் கொழும்பின் வறுமை முகக்குறிப்பு அறிக்கையினை இற்றைப்படுத்தியதுடன் மேலும் முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கு முன்னுரிமை படுத்தவேண்டிய குடியேற்றங்களை இனங்காண்பதற்காக கொழும்பிலுள்ள அனைத்து குறைந்த வருமானம் பெறும் குடியேற்றங்களிலும் ஒரு கணிப்பீட்டாய்வினையும் மதிப்பீட்டினையும் மேற்கொண்டது.

---

[8] உதாரணங்களாவன: 1) USS இனது சம்பவக் கற்கைகள் சுத்தமான குடியிருப்புக்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன, 2) கொழும்பு நகரினது தரவு அடிப்படை மற்றும் வறுமை முகக்குறிப்பு சமுதாய வலுப்படுத்தலினூடாக நகர்ப்புற வறுமை குறைப்பு, 2002.

## 5. உடனடி தலையீடுகளுக்கு சாத்தியமாகவுள்ள முன்னுரிமை பிரதேசங்களை இனங்காணல்

கொழும்பில் வறுமையை மையப்படுத்திய தலையீடுகள் முகம்கொடுக்கின்ற பல தடைகளையும் மீறி வெற்றிபெறச் சாத்தியமான தலையீடுகளுக்கு பலமான ஒரு அடிப்படையினை வழங்குகின்ற சில காரணிகள் உள்ளன.

- கொழும்பிலுள்ள பெரும்பாலான போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்கள் அளவில் சிறியனவாகும். 74%ஆன குடியேற்றங்கள் 50 வீடமைப்பு அலகுகளிலும் குறைவாக கொண்டனவாகவும் 0.7% ஆன குடியேற்றங்கள் 500 வீடமைப்பு அலகுகளிலும் கூடுதலானவையாகவும் உள்ளன. இந்நிலைமையானது வெளி முகவர் அமைப்புக்கள் அதி உயர் சமுதாய பங்கேற்புடனும் மிகவும் குறைவான முரண்பாடுகளுடனும் தமது சேவைகளை விருத்தி செய்துகொள்வதற்கு உதவி செய்கின்றது.
- குடியேற்றங்களிலுள்ள குடித்தொகையினர் பொதுவாக மூன்றாம் அல்லது நான்காம் பரம்பரையினராக உள்ளதனால் உள்-புலம்பெயர்வு மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே உள்ளது. சேரிகள் விஸ்தீரமாக்கப்படல் போன்ற உள்-புலம்பெயர்வின் விளைவான பிரச்சினைகள் கொழும்பில் காணப்படவில்லை
- குடியிருப்பாளர்களின் முயற்சிகள் மற்றும் வெளிவாரியான தலையீடுகளால் கடந்த மூன்று சகாப்தங்களில் போதிய சேவைகள் வழங்கப்பெறாத இக்குடியேற்றங்களது வாழ்க்கை நிலைமைகளில் விரைவான முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ஆகவே நிறுவனங்கள் மற்றும் பாரிய திட்டமிடலில் தாக்கமொன்றை ஏற்படுத்துகின்ற கொள்கை மற்றும் சட்ட விடயங்களை முன்வைப்பதற்கு கடினமாக உள்ள அதே நேரம் கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக முன்வைக்கக்கூடிய குறித்த பகுதிகளுள்ளன. அவையாவன,
- சமுதாய மட்ட நிறுவனங்களை பலப்படுத்தல்: அரச மற்றும் அரச சாரா முகவர்களுடன் ஒத்துழைப்பதனூடாக போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களது வாழ்க்கை நிலைமைகளில் நிலைபேறான, உரிய முன்னேற்றங்களை செய்வதற்கு உதவக்கூடிய சிறந்த இடத்தினில் சமுதாய அபிவிருத்தி சபைகள் (CDC) வைக்கப்பட்டுள்ளன. இருந்தாலும் அதனது அமைப்பு சார்ந்த ஆற்றல்கள், தலைமைத்துவம் மற்றும் பேச்சுவார்த்தை திறன்கள், குழு உணர்வினை கட்டியெழுப்புதல் என்பன பலப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் மற்றும் குடியிருப்பாளரின் உரிமை முன்னேற்றப்பட வேண்டும். 'இயக்கப்பாடு' மற்றும் 'வலுப்படுத்தல்' தலையீடுகளிலான பல செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு குறிப்பிடத்தக்களவு வெற்றிகள் பெற்றுக்கொள்ளப்படாததானது இது ஒரு இலகுவான காரியமல்ல

என்பதை குறித்து நிற்கின்றது. இருந்தாலும் படிப்படியான மாற்றங்கள் அவதானிக்கப்படலாம் என்பதுடன் சமுதாய அபிவிருத்தி சபைகள், கொழும்பு மாநகர சபை மற்றும் ஏனைய நிறுவனங்கள் போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களை அடைவதற்கான வழிகளாக அல்லாது அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களுடன் இணைந்து செயற்படக்கூடியனவாக இனங்காணப்படும் போது இந்நிலைமை இன்னும் முன்னேற்றப்படலாம். இதற்காக தற்போது சமுதாய அபிவிருத்தி சபைகளை ஆட்சி செய்கின்ற சட்ட திட்டவமைப்பிலும் ஒரு விரிவாக்கம் தேவைப்படுகின்றது.

- கட்டிளமைப் பருவத்தினர் மற்றும் சிறுவர்களின் பிரச்சினைகள்: இது மிகவும் விரைவாக கவனிக்கப்பட வேண்டியுள்ள விடயமாகும். உறுதியற்ற சமூக வலையமைப்பானது விசேடமாக சிறுவர்களுக்கு நட்புறவுடனற்ற சமூக மற்றும் பௌதீக் சூழல்களில் வளர்கின்ற சிறுவர்களுக்கு ஒரு பாதகமான சூழலை உருவாக்குகின்றது. பரந்த கல்வி வாய்ப்புக்களை வழங்குதல், வாழ்க்கை திறன்களை முன்னேற்றுதல் மற்றும் பாதுகாப்பு என்பவற்றுடன் குடும்ப அலகினை பலப்படுத்துதல் மற்றும் ஆரம்ப பாடசாலை, சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் போன்ற பொது பிரதேசங்களை அதிகரிக்கவும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- சேவைகளின் பயன்பாடு: கிடைக்கப்பெறக்கூடியதாகவுள்ள சேவைகள் மற்றும் வசதிகளின் (திண்ம கழிவு, மலசலகூடங்கள் போன்றன) பயன்பாடு தொடர்பாக பொது மக்கள் உணர்வு/ பொது மக்கள் கல்வி என்பவற்றை அதிகரித்தல்
- திறன்கள் விருத்தி: உறுதியான தொழில்கள் மற்றும்/ அல்லது உயர் சம்பளம் கிடைக்கின்ற கூலி தொழில்கள்/ சுய தொழிலை பெற்றுக்கொள்வதற்கான திறன்களை முன்னேற்றுதல்

## உசாத்துணை/ மேலதிக தகவல்களுக்கு


CIA World Fact Book (2012), Sri Lanka Fact Book, Available online http://www.indexmundi.com/sri_lanka/

CEPA, 2009. *Survey on Willingness and Ability to Pay for Pro-Poor Household Water Connections,* Report submitted to Environmental Cooperation-Asia (Eco Asia) and USAID, Colombo: Centre for Poverty Analysis. Print.

CEPA, 2010. *Analysis of Pro-Poor Service Models for Urban Areas in Sri Lanka,* Final Report Submitted to Environmental Cooperation-Asia (Eco Asia), USAID, Centre for Poverty Analysis, Colombo

Collective for Economic Democratisation, 2014. "Towards a World-Class Colombo: Development without Democracy" in Gunasekara, V. & Alles, R. *You may say I'm a dreamer: Essays on reimagining development.* Colombo: Centre for Poverty Analysis. Chapter 3, pp 9-11. Print.

Published in *The Island* 16/06/2013. Available online at http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=81464

Chularatne, H. M. U., 2000. *Land Tenure Issues and Improvement of Urban Low Income Settlements: Experiences of Colombo, Sri Lanka,* a paper presented at the Regional Workshop on Settlements of the Urban Poor: Challenges in the New Millennium, Colombo

DFID/UNDP/UN-HABITAT/UMP, 2002. *Poverty Profile, City of Colombo: Urban Poverty Reduction through Community Empowerment,* Urban Poverty Reduction Project, Colombo.

DCS, 2004. *Official Poverty Line for Sri Lanka*, Colombo: Department of Census and Statistics, Print

DCS, 2011. *Household Income and Expenditure Survey 2009/2010,* Colombo: Department of Census and Statistics. Print.

Gunetilleke, N., 2004. *Understanding the Dimensions and Dynamics of Poverty in Underserved Settlements in Colombo,* Colombo: Centre for Poverty Analysis/ Participatory Improvement of Underserved Settlements in Colombo (PRIMUSS)

a study conducted by CEPA for CMC/PRIMUSS.

Gunetilleke, N. & Abdul Cader, A., 2004 Urban Poverty in Sri Lanka, Poverty Brief 7, Colombo: Centre for Poverty Analysis. Print

Romeshun, Gunetilleke. & Mayadunne, G., 2011. *Appropriateness of the Sri Lanka poverty line for measuring urban poverty: the Case of Colombo*. Human Settlements Working Paper No. 35, London: International Institute for Environment and Development. Print.

Ministry of Urban Development and Sacred Area Development, 2009. *Urban Development*, Available online available at http://www.urbanmin.gov.lk.

Sevanatha, 2012. *Colombo Community Empowerment Project: Low Income Settlement Survey-2012,* Unpublished Data.

Fazlulhaq, N., 2011. *I'm not against beautification of Colombo, but it must be for all not some: Muzammil, Article published in The Sunday Times,* 23/10/2011, Available online at : http://www.sundaytimes.lk/111023/News/nws_31.html

The International Bank for Reconstruction and Development, The World Bank, 2012. *Turning Sri Lanka's Urban Vision into Policy and Action*, Colombo: World Bank. Available online at: http://www.unhabitat.lk/downloads/wburbanpolicy.pdf

UN-HABITAT, CEPA & Sevanatha. 2012. "Livelihood Assessment of Flood-Prone Low-Income Settlements in the City of Colombo." Report prepared for the World Bank, Colombo.

சுருக்க ஆய்வுக் கட்டுரைத் தொடர்

வறுமை மேலோட்டங்கள்

No. 1 Overview of Poverty in Sri Lanka

No. 2 Livelihoods and Poverty in Sri Lanka

No. 3 Poverty Reduction Strategy in Sri Lanka

No. 4 Dimensions of Conflict Outside the North and East of Sri Lanka

No. 5 Poverty and Youth Issues in Sri Lanka

No. 6 Poverty Issues in Southern Sri Lanka

No. 7 Urban Poverty in Sri Lanka

No. 8 Gender Dimensions of Poverty in Sri Lanka

No. 9 The Role of International Financial Institutions in Sri Lanka

No. 10 Poverty and Trade Issues in Sri Lanka

No. 11 இலங்கையில் சிறுவர் வறுமை

No. 12 வறுமையும் முதியோர்களின் சவால்களும்

No.13 இலங்கையில் வறுமை பற்றிய கண்ணோட்டம் - 2013

No. 14 இலங்கையில் நகர்ப்புற வறுமை - 2013

ISBN 978-955-1040-89-5

centre for poverty analysis

Centre for Poverty Analysis
29 R G Senanayake Mawatha,
Colombo 7, Sri Lanka
Tel: +94(011) 4690200, 2676955
Fax: +94(011) 2676959
Email: info@cepa.lk
Web: www.cepa.lk

The Asia Foundation

ThinkTank Initiative
Initiative Thinktank